புதுவை அரசு
முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம், புதுச்சேரி
பெருந்தலைவர் காமராஜர் கல்வித்துறை வளாகம்
ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏல அறிவிப்பு

ஏண்.:.567.:.CEO/DIS-IV/A1/25-26/81 தேதி:10.03.2026

புதுவை அரசு, பள்ளி கல்வி இயக்ககம் வட்டம் நான்கின் ஒதியம்பட்டு அரசு தொடக்கப்பள்ளியிலுள்ளதென்னைமற்றும் மாமரங்களின் மகசூல் அனுபவ.:.குத்தகைஉரிமத்திற்கானஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

மா– 3 மரங்கள்
தென்னை– 30மரங்கள்
குத்தகைக் காலம்: ஒருவருடம் (ஏலம் எடுத்தநாள் முதல்)

<u>விதிமுறைகள்</u>

1. அரக்கினால் முத்திரையிடப்பட்ட உறையின்மேல் தென்னை மற்றும் மாமரங்களின் மகசூலுக்கான ஒப்பந்தப்புள்ளி எனக் குறிப்பிட்டு, முதன்மைக் கல்வி அதிகாரி, பள்ளி கல்வி இயக்ககம், புதுச்சேரி என்ற முகவரிக்கு 13.03.2026 அன்று மாலை 3.00 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் யாவும் அன்றைய தினமே மாலை 4.00 மணிக்கு நேரில் வரும் ஒப்பந்தாரர்களின் முன்னிலையில் முதன்மை கல்வி அதிகாரியால் அவரது அலுவலகத்தில் பிரிக்கப்படும். மேற்கண்ட நாள் அரசால் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் அடுத்து வரும் அலுவலக நாளில் அதே நேரப்படி ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுத் திறக்கப்படும். அப்படித் திறக்கப்படும் ஒப்பந்தப் புள்ளிகளில் அதிகத் தொகையாக கோரப்படும் ஒப்பந்தாரருக்கே குத்தகை.:.ஏலம் விடப்படும்.
2. ஒப்பந்த.:.ஏலநிகழ்ச்சியில் பங்குபெறும் ஒப்பந்ததாரர்கள் ரூ.10,000.:.- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) முன்காப்புத் தொகையாகஒப்பந்தப் புள்ளி உறை சமர்ப்பிக்கும்போது வரைவோலை (டீல நயல ழக னுநஅயனெ னுசயகவ) இணைக்கப்பட வேண்டும்.
3. வெற்றி பெறாத ஒப்பந்ததாரர்களின் முன்காப்புத் தொகை <u>வரைவோலை</u> ஏலம் முடிந்தவுடன் திருப்பித்தரப்படும்.
4. <u>மேற்கூறிய வரைவோலையை, பணப்பட்டுவாட அதிகாரி முதன்மை கல்வி துறை அதிகாரி, கல்வித்துறை, புதுவை, அவர்களின் முகவரியிட்டுவழங்குமாறு இதன் வாயிலாக தாங்கள் பணிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.</u>
5. மேலே குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் நிராகரிக்கப்படும்.
6. யாதொரு காரணமுமின்றி எந்தவொரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டுள்ளவரகக்கு முழு உரிமை உண்டு.
7. ஒப்பந்த நிகழ்ச்சி முடிந்தபின் குத்தகைவிடப்பட்ட மரங்களின் மகசூல் பற்றி இந்த அலுவலகம் எந்தவிதமானபொறுப்பும் ஏற்காது. குத்தகைக் காலம் முடிந்தவுடன் அனைத்துமரங்களையும் பொறுப்பானஅலுவலரிடம் பாதுகாப்பாகஒப்படைக்கப்படவேண்டும்.
8. ஒப்பந்தப் புள்ளியைப் பெறுவதற்கானகாலக்கெடுமுடிவடைந்தபின்பும்,ஒப்பந்தமுறைமுடிவுஅறிவித்தபின்பும்,அதனைதிரும்பப் பெறுவதுஏற்க இயலாது.
9. மேற்கணட 30தென்னைமரங்கள், 3 மாமரங்கள்,ஆகியவற்றின் மகசூல் பொருட்களானதேங்காய்,மாங்காய் ஆகியவற்றைகுத்தகைத்தாரர் அனுபவித்துக் கொள்ளஉரிமைஉண்டு. எக்காரணத்தைக் கொண்டும் பசுமையானதென்னைமட்டைகளையோ,மாங்கிளைகளையோவெட்டக் கூடாது.
10. மேற்கூறியதென்னைமரங்களிலிருந்துஎக்காரணத்தைக் கொண்டும் கள்(மது) இறக்கக் கூடாது.
11. குத்தகைதாரர் மரங்களுக்குத் தேவையானபாதுகாப்புக் கருதிதாங்களேகாவல் போட்டுக் கொள்ளவேண்டும்.
12. மேலேகுறிப்பிட்டமரங்களைஅரசினரால் வெட்டநேரிட்டால் அதுசமயம் குத்தகைதாரர் மறுப்புஏதும் கூறாமல் மரத்தைவெட்டஅனுமதிக்கவேண்டும்.
13. அவ்வாறுவெட்டப்பட்டமரங்களுக்குஈட்டுத் தொகைஏதும் வழங்கப்படமாட்டாது.
14. குத்தகையைக் குறிப்பிட்டகாலத்திற்குள் தானாகவேரத்துசெய்யநேர்ந்தால் அதனால் ஏற்படும் இழப்பிற்குதுறைபொறுப்பேற்காது.
15. இதில் கலந்துகொள்ளவிரம்புபவர்கள் குத்தகைக்குவிடப்படும் மரங்களைவேலைநாட்களில் பார்வையிடலாம்.
16. ஒப்பந்தாரர் எடுத்தமுழுத் தொகையையும் அதற்குண்டானசரக்குவிடப்படும் மரங்களைவேலைநாட்களில் பார்வையிடலாம்.
17. இந்தகுத்தகை.:.ஏலம் சம்பந்தரமாக,கீழேகையொப்பமிட்டுள்ளவரின் முடிவே இறுதியானது.

10/3/26

முதன்மைக் கல்வி அதிகாரி
கல்வித்துறை, புதுச்சேரி

நகல் பெறுபவர்:

1. தலைமையாசிரியர்
அரசுதொடக்கப்பள்ளி,ஒதியம்பட்டு.
2. மின்னனுதரவுசெயலாக்கம்,
பள்ளிகல்வி இயக்ககம்,புதுச்சேரி.
3. *அறிவிப்புப் பலகை*